Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR**
**Case No. CC. 328/2023**
**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1 , Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. மனோகரன் | **தொழில்** | வியாபாரம் |
| **த/க பெயர்** | திரு. தனபால் | **கிராமம்/ஊர்** | பெரியகரம் |
| **வயது** | 47 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் | 1 |
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 17th day of July 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை-**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் காவப்பட்டறை அருகே ரோட்டின் ஓரமாக கரும்பு ஜூஸ் வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 4 வருடத்திற்கு முன்பு ஒருநாள் காலை 10.30 மணியளவில் நான் வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது இருச்சக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் கரும்பு ஜூஸ் கட்டி தருமாறு கேட்டார்கள். நான் அவர்கள் கேட்ட வாட்டர் கேனில் ஜூஸை ஊற்றியபோது அதில் ஒருவர் நான் அணிந்திருந்த செயினை பிடித்து இழுத்து பறித்து கொண்டு சென்று விட்டார். மேற்படி நபர் யார் என்று எனக்கு தெரியாததால் என்னால் அடையாளம் காட்ட இயலாது. சாட்சி ஆஜர் எதிரியை பார்த்து விட்டு தெரியாது என்று கூறுகிறார். இது சம்மந்தமாக குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் நான் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்ததுதான். மேலும், புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் என்னால் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. மேற்படி செயினானது எனது கடைக்கு அருகே அறுப்பட்ட நிலையில் இருந்தது. மேற்படி செயினை அடையாளம் காட்டி நீதிமன்றம் மூலம் இடைக்காலமாக பெற்று கொண்டேன். என்னிடம் காட்டப்படும்

புகைப்படத்தில் உள்ள செயின் நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று கொண்டது தான். **(அது அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

புகாரை போலீசார் தான் எழுதினார்கள் என்றால் சரிதான். மேற்படி செயினை எனது கவனக்குறைவால் நானே எங்கோ தொலைத்து விட்டு, போலீசாரின் அறிவுத்தலின் படி காவல் நிலையத்தில் பொய்யான புகார் அளித்து, போலீசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் இவ்வழக்கிற்கு ஆதரவாகவும், எதிரிகளுக்கெதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

**Signature of Witness** **Judicial Magistrate No.II**
**Tirupathur.**